செ.வெ.எண் : 02/டிசம்பர் நாள் : 01.12.2018

# இராமநாதபுரம் மாவட்டம்

## உலக எய்ட்ஸ் தினத்தினை முன்னிட்டு

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்து தகவல்

உலக எய்ட்ஸ் தினத்தினை முன்னிட்டு மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் , எய்ட்ஸ் விழிப்புணர்வு குறித்து பொதுமக்களுக்கு தகவல்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

எய்ட்ஸ் நோயினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், எய்ட்ஸ் நோய் தடுப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஆண்டு தோறும் டிசம்பர் 1-ஆம் நாள் உலக எய்ட்ஸ் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் உலக எய்ட்ஸ் தினத்தின் முக்கிய குறிக்கோள் வெளிப்படைத் தன்மை, பொறுப்புணர்வு மற்றும் பங்களிப்பு மூலம் எய்ட்ஸ் தொற்று பரவாமல் தடுக்கும் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்று இல்லாத குடும்பத்தை உருவாக்கிடுவேன். எச்.ஐ.வி / எய்ட்ஸை பூஜ்ஜியமாக குறைப்பேன். புதிய எச்.ஐ.வி /எய்ட்ஸ் இல்லாத உலகம் / புறக்கணித்தல் இல்லாத உலகம் / எய்ட்ஸ் தொடர்பான இறப்புகள் இல்லாத உலகம் உருவாக்கிடுவேன்.

ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட இலக்கை அடைய தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் (NACO) தீவிரமாய் செயல்பட்டு வருகிறது. இந்த வருடம் "எச்.ஐ.வி / எய்ட்ஸ்-ஐ பூஜ்ஜியமாக குறைப்பேன்" என்று ஒவ்வொரு மக்களும் ஒவ்வொரு குடும்பமும் சூளுரை எடுத்துக்கொண்டு எச்.ஐ.வி / எய்ட்ஸ் இல்லாத உலகத்தைப் படைக்க இத்தருணத்தில் நாம் பாடுபட வேண்டும்.

உலகம் முழுவதும் 33.3 மில்லியன் மக்கள் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். நம் இந்தியாவில் வடகிழக்கு மாநிலங்களாகிய அஸ்ஸாம், திரிபுரா, மேகாலயா, நாகலாந்து, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் போதை ஊசி பயன்பாட்டால் எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்று அதிக அளவில் உள்ளது.

தமிழ்நாடு (HSS 2014-2015)படி எச்.ஐ.வியின் தாக்கம் 0.28 சதவீதமாகவும், இராமநாதபுரம் மாவட்டம் 0.25 சதவீதமாகவும் உள்ளது. நமது மாவட்டத்தில் 2002 முதல் அக்டோபர் 2018 வரை மொத்தம் 2421 நபர்கள் எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 1450 ஆண்கள், 751 பெண்கள், 45 குழந்தைகள், 12 திருநங்கைகள், 163 கர்ப்பிணிப் பெண்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் கூட்டு மருந்து சிகிச்சை மையத்தில் 2009 முதல் அக்டோபர் 2018 வரை மொத்தம் 2196 நபர்கள் பதிவு செய்துள்ளார்கள். இவற்றில் 1126 நபர்கள் கூட்டு மருந்து சிகிச்சை எடுப்பவர்களாவர்கள்.

பாதுகாப்பற்ற உடலுறவு, முறையற்ற இரத்த பரிமாற்றம் போன்ற காரணங்களினால் எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோய் ஏற்படுகின்றது. எய்ட்ஸ் நோயினை பரவாமல் தடுப்பது எவ்வளவு முக்கியமோ அதே வேளையில் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களைப் புறக்கணிக்காமல் ஆதரவாக பரிவுடன் நடந்து கொள்வது மிகவும் அவசியமாகும். ஆகையால் மக்கள் ஒழுக்கமுடன் இருந்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டின்படி, தகாத உடல் உறவைத் தவிர்த்து, எச்.ஐ.வி / எய்ட்ஸ் தொற்று இல்லாத மாவட்டத்தை, தமிழகத்தை, இந்தியாவை, உலகத்தை உருவாக்க இந்த உலக எய்ட்ஸ் தினவிழாவில் உறுதிமொழி எடுப்போம். மேலும் எய்ட்ஸ் நோய் தொற்று குறித்து விழிப்புணர்வு பெற்று எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஆதரவாக செயல்படுவோம் என உறுதியேற்றுக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**